(எ) அனைவருக்கும் உகந்த முறையில் இச்சிக்கலுக்குத் தீர்வு காண குடிமக்கள் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அப்பகுதியைச் சேர்ந்த சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வழக்குரைஞர்கள், மற்றும் ஹோசூரைச் சேர்ந்த பெரிய மனிதர்கள் சிலர், உள்ளூர் உயர்நிலைப்பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் ஆகியோர் இது குறித்து விவாதித்தனர். தெலுங்கு துதிப்பாடலுடன் தமிழ்த் துதிப்பாடலையும் சேர்க்க அவர்கள் முடிவு செய்தனர். இது 28—8—1967 முதற்கொண்டு செயலில் இருந்து வருகிறது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, அங்கே வழக்கமாக என்ன மொழியில் துதிப்பாடலகள் பாடப்பட்டு வந்தது ? திடீரென்று சென்ற ஆண்டில் அதை மாற்றக் காரணமென்ன ? நான் கேள்விப்பட்ட வரையில் அங்கே தெலுங்கு போன்ற மொழிகளையே பேசக்கூடாது, பேசினால் இந்த ராஜ்யத்தை விட்டே வெளியில் போய்விட வேண்டும் என்றெல்லாம் அங்கு சொல்லப்பட்டதாகக் கேள்விப்பட்டேன். அது உண்மையா ?

மாண்மிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அங்கே பெரும்பாலான மாணவர்கள் தெலுங்கு மாணவர்களாக இருக்கிறார்கள். மூன்றில் ஒரு பகுதியினர் தமிழ் மாணவர்களாகும். அங்கு தொடர்ந்து தெலுங்கு மொழியில்தான் பாடப்பட்டு வந்தது. நீண்ட நாட்களாக தமிழிலும் பாடவேண்டுமென்று தமிழ் மாணவர்கள் கோரிக்கை வைத்திருந்தும் அது ஏற்கப்படவில்லை. தமிழில் பாடவேண்டுமென்பதற்காக முயற்சிகள்எடுத்துக் கொள்ளப்பட்ட நேரத்தில், தெலுங்கு மாணவர்களுக்கும், தமிழ் மாணவர்களுக்கும் இடையே 25-ம் தேதி கலகம் ஏற்பட்டது. உடனடியாக மாவட்ட கலெக்டர் அவர்களும், எஸ்.பி.யும் சென்று எல்லோரையும் கூட்டி வைத்து சுமுகமாக ஒரு ஏற்பாடு செய்து, தெலுங்கில் பாடுவது என்றும், பின்னர் தமிழில் துதிப்பாடல் பாடுவது என்றும் எல்லோரும் ஒத்துக்கொள்வதற்கான முடிவு எடுக்கப்பட்டது. அதைத் தவிர வேறு ஏதேனும் உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்ற நிலைமையிருந்தால் அது குறித்து தனியாக ஆராயப்படும். இப்போது கொடுக்கப்பட்டிருக்கும் விவரம் இவ்வளவுதான்.

Pre-Engineering and Pre-Medical Courses

* 117 *Q.*—THIRU **N. R. THIAGARAJAN** : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the number of candidates from (1) Medical; and (2) Engineering Colleges who have failed continuously in Pre-Medical and Pre-Engineering Courses during the last three years; and

(*b*) whether they are permitted to appear for the examination even though they fail any number of times ?

பிரி மெடிக்கல் பிரி இன்ஜினியரிங் வகுப்புகள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) (1) பொறியியற் கல்லூரி, (2) வைத்தியக் கல்லூரிகளில் பிரி மெடிக்கல், பிரி இன்ஜினியரிங் வகுப்பில் தொடர்ந்து கடந்த மூன்று ஆண்டுகளாக தவறியவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) எத்தனை தடவை தேர்வில் தவறினாலும் தொடர்ந்து எழுத அனுமதிக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) & (இ) மன்றத்தின் முன் ஒரு அறிக்கை* வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, ஹரிஜன பையன்கள் மெடிகல் கல்லூரிக்கு எடுக்கும்போது 40 சதவீதம் மார்க் வாங்கினால் போதுமென்று தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பின்னர் பரீட்சை எழுதும்போது 50 சதவீதம் எடுத்தால்தான் பிரி மெடிக்கல் கோர்ஸில் தேர்ந்தெடுக்கப்படும் நிலையிருக்கிறது. இந்தக்காரணத்தால் 100-க்கு 10 பேர் கூட தேறுவதற்கு கஷ்டமான நிலையிருக்கிறது. ஆகவே ஹரிஜன மாணவர்களை அதிலேயும், தேர்ந்தெடுப்பதற்கு சலுகை கொடுப்பதைப் போல, பாஸ் செய்வதற்கும் சலுகை கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போது நடைமுறையில் சேர்த்துக்கொள்வதற்கு மட்டும்தான் வசதி கொடுக்கப்பட்டிருக்கிறது. பாஸ் செய்வதற்கு மற்றவர்களோடு சேர்ந்து படித்து தேறும்வழிதான் இருக்கிறது. இதற்குச் சலுகை கொடுக்கப்படுமானால் மற்ற எம்.எஸ்.ஸி. போன்றவைகளுக்கும் கொடுக்க வேண்டிவரும். அவர்களுக்குச் சலுகை கொடுத்து ஊக்குவிக்க வேண்டுமானால் பயிற்சி கொடுத்தல், அதிக கவனம் செலுத்தல் போன்ற காரியங்களில் தான் வாய்ப்பு ஏற்படுத்தலாமே தவிர தேர்வு எண்களில் வேறுபாடு காட்ட இயலாது.

திரு என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, மூன்றுமுறை தான் பரிட்சை எழுதலாம் என்று இருக்கிறது. அதை மாற்றி தேவைப்பட்ட தடவைகள் எழுதும் சலுகை கொடுக்க சர்க்கார் முன்வருமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, முதல் ஆண்டில் மூன்று தடவை என்று வரையறை இருக்கிறது. மறுபடியும் எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் எழுதலாம் என்றிருக்கிறது. தனிப்பட்ட மாணவர்களுக்கு சங்கடங்கள் வரும் போது அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை எழுதுவதற்குச் சலுகை கொடுக்கும் வரையறை இருக்கிறது. அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

திரு சி. வி. ராசகோபால் : தலைவரவர்களே, இப்போது கேட்கப்பட்ட மாணவர்கள் அர்சுன மாணவர்கள் என்று சொல்லப்பட்டது. அது அர்சுன மாணவர்களைப் பற்றியதா ? அல்லது ஹரிஜன மாணவர்களைப் பற்றியதா ? எந்த மாணவர்கள் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

Usage of Pure Tamil Words

*** 118 *Q.*—THIRU N.R. THIAGARAJAN :** Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether orders have been issued to Government Books Publishers and the Government Departments that only chaste and pure Tamil words, unmixed with English, Sanskrit or other language should be used ;

(*b*) if so, the Departments to which such orders have been issued ; and

(*c*) the Departments which have implemented the order ?

* Printed as Appendix I on page 29